பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 10 வியாழக்கிழமை (22.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 89

# நிலையான சமாதானத்தை இங்கு ஏற்படுத்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க வேண்டும்

## ஐந்தாண்டு நிறைவையொட்டி நோர்வேத் தூதுவர் விசேட உரை



கொழும்பு, பெப்ரவரி 22

**இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாதுகாக்கப்பட வேண்டும்.**

**இந்த நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களும், தற்போதைய பிணக்குக்கு பேச்சு மூலம் அமைதித் தீர்வைக்காண வேண்டியவர்களும், இலங்கை நாட்டின் மக்களும் தலைவர்களுமே அன்றி நோர்வேயோ அல்லது வேறு தரப்பினரோ அல்லர். நோர்வே தனது உதவியை வழங்கத் தயாராகவே இருக்கின்றது.**

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்ட்கர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாவதை ஒட்டி நேற்றுக் கொழும்பில், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் சிறப்புரை ஆற்றினார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது பேச்சின் சாராம்சம் வருமாறு:

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்கு யுத்த நிறுத்த உடன்பாடு வழிசெய்தது. அரசியல் பேச்சுவார்த்தையை அது சாத்தியமாக்கியது. இந்தப் பிணக்கிற்கான அமைதித் தீர்வு எட்டப்படுவதற்காக இந்தப் பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு**

தரப்புகளோடும், குடிமக்களோடும் சேர்ந்து பணியாற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அதன் மூலம் மோசமான குழப்பங்களைத் தவிர்க்கச் செய்திருக்கின்றது. மேலதிகமாக கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு இல்லாவிடின் மறைக்கப்பட்டு - மறைந்து - போயிருக்கக் கூடிய விடயங்களையும் அது வெளியே கொண்டுவந்திருக்கின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் தரப்புகளோடு இணைந்து கண்காணிப்புக் குழு பணியாற்றியமை பெருமளவு வன்செயல்களையும், மோசமடைந்திருக்கக் கூடிய பல பயங்கர நிலைமைகளையும் தவிர்க்கச் செய்திருக்கின்றது என நான் நம்புகின்றேன்.

யுத்த நிறுத்த ஏற்பாடானது ஓர் இடைமாறுகாலத்துக்கான தற்காலிக ஏற்பாடாகக் கருதப்பட்டாலும் அது பல உயிர்களைக்காப்பாற்றியுள்ளது என்றும், அதுவே அமைதிக்கான முக்கிய கருவி என்றும் நான் திடமாகக் கருதுகிறேன்.

கவலைப்படத்தக்க வகையில் மீண்டும் பெரிய யுத்தங்களும் இராணுவ நடவடிக்கைகளும் 2006 மற்றும் 2007இல் வெடித்திருப்பதையும் இவை ஆயிரக்கணக்கான பொதுமக்களை மனிதப் பேரவலத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றமையையும் நாம் இப்போது காண்கின்றோம்.

இரு தரப்பினருமே யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகவில்லை. அத்தோடு அதனை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையை அவர்கள் விரைவில் காண்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்ந்து அவசியமானது என்றும், நோர்வே ஆக்கபூர்வமான பங்களிப்பை

(03 ஆம் பக்கம் பார்க்க)

## முழு நாட்டையும் மக்களையும் விட யுத்த நிறுத்த உடன்படிக்கை பெரிதல்ல!

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப். 22

நாட்டின் இறைமைக்கும் அதன் தேசிய பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்படுமாக விருந்தால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது. முழு நாட்டையும் மக்களையும் விட எந்த ஒப்பந்தமும் பெரிதல்ல.

அமைச்சரும் அரச பாதுகாப்புப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல நேற்று இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவடைகின்றன. அது எத்தனை வருடங்களை நிறைவு செய்கின்றது என்பது பிரச்சினையல்ல. தேசிய இறைமைக்கும் அதன் பாதுகாப்பிற்கும் மக்களுக்கும் அது ஆபத்து ஏற்படுத்தாத விதத்தில் இருக்கவேண்டும் என்பதே முக்கியம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது குறித்து தெளிவாக விளக்கியுள்ளார். எந்த ஒப்பந்தமாகவிருந்தாலும் நாட்டின் அரசமைப்புக்கு முரணாக அதைப் பாவிக்க முடியாது.

நாட்டின் அரசமைப்புக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் இந்நாட்டு மக்களுக்குமே முதலிடம் வழங்கப்படும் என்று அவர் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள சரத்துகள் பிழையானவை என்று கூறப்படுகிறது. யாராவது இதற்கு எதிராக வழக்குப் போட்டால் அந்த வழக்கில் அவர்கள் வெற்றி பெறும் வாய்ப்பும் ஏற்படலாம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டதன் விளைவாகவே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இலங்கைக்கு வந்தது.

(04 ஆம் க்கம் பார்க்க)

## சிங்களப் பெண்கள் சிலரும் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு, பெப். 22

சிங்களப் பெண்கள் சிலர் விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளனர் என்பது விசாரணையில் இருந்து தெரியவந்திருக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

புலிகளிடம் ஆயுதப் பயிற்சிபெற்ற சிங்கள யுவதிகளை விரைவில் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளிடம் பயிற்சிபெற்ற 19 சிங்களவர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்: அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மேலும் பலர் தொடர்பான விவரங்கள் தெரியவந்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## புதிய மகசீன் சிறையில் நேற்றுமுதல் தமிழ் கைதிகள் உண்ணாவிரதம்!

கொழும்பு, பெப். 22

புதிய மகசீன் சிறையில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பாக சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காக நேற்றுத் தொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ந்தும் விசாரணை எதுவுமின்றித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தங்களது விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் அல்லது பிணையில் செல்லத் தங்களை அனுமதிக்குமாறும் சட்டமா அதிபரிடம் கோரியே கைதிகள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்று கைதிகள் தரப்பில் கூறப்படுகின்றது. இந்தப் போராட்டத்துக்கு இன பேதமின்றி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## வாழைச்சேனையில் கிளைமோர்; இன்ஸ்பெக்டர் மற்றும் இருவர் பலி

வாழைச்சேனை, பெப்.22

வாழைச்சேனை, ஓட்டமாவடியில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் கொலையுண்டனர்.

இச்சம்பவத்தில் மேலும் 4 பொலீஸார், 2 படையினர் உட்பட 16 பேர் காயமடைந்தனர். காயமுற்றவர்களில் ஒன்பது பொதுமக்களும் அடங்குவர்.

நேற்று மாலை 5 மணியளவில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரை இலக்கு வைத்தே இந்த கிளைமோர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (அ-4)

## இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல்; அரசு மீது மன்னிப்புச்சபை அதிருப்தி

கொழும்பு, பெப்.22

இலங்கையில் ஆள்கள் காணாமற்போகின்றமை மற்றும் கடத்தப்படுகின்றமை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசுமீது கடும் அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தக் கடத்தல்களை தடுத்து நிறுத்தும்படி வலியுறுத்தி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு எதிர்ப்பு மனு ஒன்றை அனுப்புவதற்கும் மன்னிப்புச்சபை தீர்மானித்திருக்கிறது.

இது தொடர்பாக மன்னிப்புச்சபை வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பலகடத்தல்கள், காணாமற்போதல்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இறுதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் (வயது-37) கடந்தவாரம் காணாமற்போயுள்ளார்.

ஸ்ரீலங்காவில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நடைபெற்ற இருவேறுபட்ட மோதல்களில் பல ஆயிரம் மக்கள் காணாமற்போனமைக்கு ஸ்ரீலங்கா படைகள்தான் காரணமாக அமைந்துள்ளன.

அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவேண்டும். மேலும் இந்த

(03 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் வீதியில் கிரனேட் வீச்சு 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.22

நாவலர் வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் ஆசிரியர் ஒருவரும் மாணவர்கள் ஐவரும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று பிற்பகல் 04.05 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் ஆசிரியரான பி.முகுந்தன் (வயது 33 - ஆனைக்கோட்டை), வி.கௌரிதரன் (வயது 19 - மடம் வீதி, யாழ்ப்பாணம்), ஆர்.ஜனகன் (வயது 17, பழம் வீதி, கந்தர்மடம்), ரி.தனுஷா (வயது 18, வண்ணார்பண்ணை), எம்.சிந்துஜா (வயது 19 - யாழ்ப்பாணம்), ரி.தமோஹனுதன் (வயது 17, பருத்தித்துறை வீதி.

(03ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இளம் அதியுயர் விஞ்ஞான ஆய்வாளர்

கலாநிதி

### புண்ணியமூர்த்தி ரவிராஜன்

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர் கலாநிதி புண்ணிய மூர்த்தி ரவிராஜன் அவர்கள் பௌதிக விஞ்ஞானத்திற்கான இளம் விஞ்ஞான ஆய்வாளர் என்று கௌரவ கல்வி அமைச்சரினால் 20.12.2006 அன்று அதி உயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முதலாக இளம் விஞ்ஞானிகள் கௌரவிக்கப்பட்டமை உயர்கல்வித் துறையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல்கலைக்கழக உபவேந்தர்களும் இயக்குநர்களும் கொண்ட குழுவால் கலாநிதி பு. ரவிராஜன் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டமை மாதகல் பெருமகன் என்பதால் மாதகல் கல்வி அபிவிருத்தி சங்கம் பெருமிதம் அடைகின்றது. இவரின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் விளக்க உரைகள் இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட விஞ்ஞான மாநாடுகளில் நிகழ்த்தப்பட்டுள்ளன. மேன்மேலும் இவரின் ஆய்வு தொடரவும், சிறக்கவும் மாதகல் மக்கள் பெருமை பெற்றிடவும் இவர் பணி விரிந்து, பரந்து நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்த்திடவும், முன்மாதிரிகையாகத் திகழ்ந்து பல்சிறப்புகள் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

(சி-52075) **மாதகல் கல்வி அபிவிருத்திச் சபை.**

## நீங்காத நினைவலைகளில் ஆறாண்டுகள்...!



### அமரர் கதிரன் முதலி

மண் மகிழ 31-01-1919 கண் நெகிழ 01-03-2001

திதி: ஷஷ்டி 22.02.2007

*காலமெல்லாம் கண்மணிபோல் எம்மைக் காத்து*
*ஞாலமெல்லாம் எம்மைப்போற்ற வளர்த்தெடுத்தீர்*
*ஆண்டுகள் ஆறுஅல்லஅறுபது ஆனாலும்*
*மாறாது உம் நினைவு எம் நெஞ்சில் என்றென்றும்*

*விடத்தற்பளை வீதி,*
*உசன் ,மிருசுவில்.* (சி-52078) **குடும்பத்தினர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 ★ 11 ★ 1938



உதிர்வு 08 ★ 03 ★ 2003

### அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை

(இளைப்பாறிய கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர்)

**திதி: 22.02.2007**

நானிலத்தின் நாயகனே! நாடு போற்றும் நாவலனே!
நீ எம்மை விட்டுப்பிரிந்து
நாலாண்டு சென்றிடினும் உந்தன்
நாவிலிருந்து வரும் அன்பான வார்த்தைகள்
நாத்தடுமாறும் வயதுடைய எங்கள் செவிகளில்
தேனாகப் பாய்ந்து சிந்தை குளிர்வித்து
தெம்பூட்டுகின்றதடா.

உன் ஆத்மா சாந்தியடைய என்றும் இடையறாது பிரார்த்திக்கும்
வே. தர்மையா (அண்ணன்),
இ. பொன்னம்மா, க. பாக்கியம் (அக்காமார்),
மகாலிங்கம் மனோன்மணி (மைத்துனி).

*வாதரவத்தை,*
*புத்தூர்.* (58367)

## மரண அறிவித்தல்

### *அமரர் நாகலிங்கம் கனகசபை*



(Retired Tutor, Nursing School, Singapore)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமகவும் கொண்ட நாகலிங்கம் கனகசபை 18.02.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் க. சறோயினிதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை, சிங்கப்பூர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற செ. கந்தையா - புவனேஸ்வரி, சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் க. நவிந்திரன் (கணக்காளர், சிங்கப்பூர்), க.சேகர் (கணனி பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ந.கிருஸ்ணபிள்ளை (சிங்கப்பூர்), ந.பாலச்சந்திரன் (இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி, சிங்கப்பூர்), ந.சண்முகநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சிங்கப்பூர்), ந.சிவலிங்கம் (வங்கி உத்தியோகத்தர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ந.சாமினி, சே.மீரா ஆகியோரின் அன்பு மாமனும் திருமதி கி.மகேஸ்வரி (மலேசியா), பா.புஸ்பம் (சிங்கப்பூர்),ச.ஜெயம் (சிங்கப்பூர்), சி.வாசுகி (குடிவரவுத் திணைக்களம் - சிங்கப்பூர்), காலஞ்சென்ற க. மாணிக்கவாசகர் (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமிடல் அலுவலகம், உகண்டா), காலஞ்சென்ற செல்வி மோகனசுந்தராம்பாள், க.குணரட்ணம் (கணக் காளர், மாலைதீவு), க. கனகரட்ணம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி. மோ. செல்வேஸ்வரி (ஜேர்மனி), திருமதி மா.சாரதாமணி (ஆஸ்திரேலியா), கு.நிலாம்பிகை (மாலைதீவு), க.கோஷிமலர், ச.மோகனதாஸ (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ந. சாமுவேலின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.02.2007 செவ்வாய்க்கிழமை சிங்கப்பூரில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*Telok Blangach Crescent,*
*Singapore - 0099, Tel.No: 62703742.*

தகவல்: [illegible]

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் கிறிஸ்தவ (Non R/c) 33 வயது மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0776184386 (58378)

## தவறிவிட்டது

இரத்தினம் ஜெயவர்த்தனம் என்பவருடைய ஆயுள் காப்புறுதிப் பத்திரம் (இல. 100030705) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் இலங்கை (வரையறுக்கப்பட்டது) இல் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (58369)

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

பதிவு இலக்கம்.ஜே/1572 திகதி: 01.03.1972

### பதவிவெற்றிடம்

01. பதவி: கணக்காளர்
02. குறியீட்டு இலக்கம்: 104/10
03. சம்பள அளவுத் திட்டம்:
10700/- 120x10-130x10-10320/-
அடிப்படை சம்பளத்தில் 10 வீதம் அதிகரிப்பு.ஆணைக்குழுவில் பதவி நிர்ணய அங்கீகாரம்பெற்றுக்கொள்ளும் திகதி தொடக்கம் வழங்கப்படும்.
$(10700 \times \frac{10}{100}\% = 1070/-)$
04.பதவி எண்ணிக்கை-01
05.கல்வித் தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12 ஆவது சம்பளத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ)ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத்துறையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
இ)கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/க.பொ.த.(உயர்தரத்தில்) கணக்கியலை உள்ளடக்கிய 3 பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
06.வயது: விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச்சங்க பணியாளர் களுக்கு வயதெல்லை விலக்களிக்கப் பட்டுள்ளது.கூட்டுறவுச் சங்க பணி யாளர்கள் தாங்கள் கடமைபுரியும் கூட்டுறவுச் சங்கம் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
07.சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
08.சங்கம் கோரும் பிணைப்பணத்தை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும்.
09.விண்ணப்ப முடிவு திகதி: 10.03.2007
10.விண்ணப்பங்கள் யாவும் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.
11.விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
**தலைவர்,**
**கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது),**
**கே.கே.எஸ். வீதி, தாவடிச் சந்தி, கோண்டாவில்.**
12.விண்ணப்பம் அனுப்பும் முறை:
விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.விண்ணப்பக் கடித உறையின் மேல்பக்க இடது மூலையில் 'கணக்காளர்' குறி யீட்டு இலக்கம் - 104/10 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(சி-52073)

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியரும் எமது சங்க உறுப்பினருமாகிய

### கந்தையா மனோவதனராசா

அவர்கள் 19.02.2007 அன்று அகாலமரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை ப.நோ. கூ. சங்கப் [illegible]
[illegible] கூட்டுறவுச் சங்கம்.


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007

80% OFF

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

50% Off Advances Courses

Diploma in Video Editing [illegible] 3250
Diploma in Multimedia [illegible] 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 23/02/2007
Batch II - 24/02/2007
Batch III - 25/02/2007
Batch IV - 28/02/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில் 02 . 12 . 1939*



*ஆண்டவன் அடியில் 05 . 03 . 2006*

### அமரர் செல்லையா சாரத்தினம்

*(இளைப்பாறிய கமநல அபிவிருத்தித் திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)*

எம் வீட்டின் ஒளிவிளக்கு அணைந்து
இன்று ஓராண்டு கடந்ததுவோ?
ஆண்டு ஒன்று கடந்தாலும் உங்கள்
மதிமுகம் தான் மறைந்திடுமோ?
பகலிரவாய் எமக்காக வாழ்ந்து
உழைப்பால் உயர்ந்த உத்தமனே!
நீண்டதுயில் நீங்கள் ஆனாலும்
உங்கள் நினைவலைகள் தான்
எம்மை விட்டு நீங்கிடுமோ?
நாம் உங்களை என்றும் மறவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

'கமலை', உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (58229)

உமது பிரிவால் என்றும் துயருறும்
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம் 01 . 03 . 1973*



*மறைவு 04 . 03 . 2006*

### அமரர் சின்னராசா ஜெயக்குமார் *(தொண்டன்)*

*(விஜு நகைமாட உரிமையாளர், கொடிகாமம்)*

திதி: ஷஷ்டி 22.02.2007

எம் வீட்டின் ஒளிவிளக்கு அணைந்து
இன்று ஓராண்டு கடந்ததுவோ?
பகலிரவாய் எமக்காக வாழ்ந்து
உழைப்பால் உயர்ந்த உத்தமனே!
பாசம் மிக்க அப்பாவே
பாரினிற்கு உனது தொண்டு
போதுமென்று நினைத்தாயோ?

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இத்தியடி பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (58265)

கீதா (மனைவி),
**பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### கந்தர் அம்பிகைபாகன்

மலர்வு 07 - 12 - 1926 உதிர்வு 25 - 01 - 2007

கடந்த 23.01.2007 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.02.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.இதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கூவில்,*
*புலோலி தென்மேற்கு,புலோலி.* [58373]

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## செத்தும் சாகாத நிலையில் செயலிழந்து கிடக்கும் உடன்பாடு

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு இன்றுடன் ஐந்து வயது கடந்து விட்டது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியிருக்கின்றமை போல செயலிழந்து, செல்லரித்து, உக்கி, உருக்குலைந்து வெறும் காகிதமாகி இருக்கின்றது அந்த உடன்பாடு. என்றாலும் பெயரளவிலேனும் அது நின்று, நிலைத்து, நீடிக்கின்றது என்பதே யதார்த்தம்.

நிழல் யுத்தம் ஒன்று தனது கோரமான நிஜ முகத்தை மூடிக்கொண்டு இங்கு தொடர்வதற்கு இடமளித்து செயலற்றுச் செத்துக்கிடக்கிறது யுத்த நிறுத்த உடன்பாடு.

அதனைக் கிழித்தெறியும்படி பௌத்த - சிங்களப் பேரினவாதம் எகிறும்போதும் - அப்படிச் செய்யத் தனக்கு விருப்பமும் ஆசையும் இருந்தும் - பெயரளவிலேனும் அதைக் கிழித்தெறியாமல், அது நடைமுறையில் இருப்பதுபோல பாசாங்கு பண்ணுகிறது - பாவனை செய்கிறது - தென்னிலங்கை அரசுத்தலைமை. அதற்கான சில காரணங்களை நேற்று இப்பத்தியில் பார்த்தோம். இன்னும் சில காரணங்களை இன்று நோக்குவோம்.

யுத்த நிறுத்த உடன்பாட்டை பெரியளவில் - வெளிப்படையாகவே - பகிரங்கமாகவே - மீறும் வகையில் பெரும் படையெடுப்புகளையும் இராணுவ நடவடிக்கைகளையும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளையும் மேற்கொண்டுவரும் அரசுத் தரப்பு, அந்த உடன்பாட்டைக் கிழித்தெறிவதாகவோ அல்லது அதிலிருந்து வெளியேறுவதாகவோ வெளிப்படையாக அறிவிக்கப் பின்நிற்பதற்கான பிரதான காரணங்களில் ஒன்று சர்வதேச அழுத்தம் என்பது யாவருக்கும் தெரிந்த விடயம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுகாண்பதில் சிரத்தை ஏதுமின்றி, இராணுவ நடவடிக்கை முனைப்பில் இலங்கை அரசு தீவிரமாக இருக்கின்றது என்ற அதிருப்தியும் விசனமும் சர்வதேச சமூகத்தில் மேலோங்கி வரும் வேளை இது. இதற்காக இலங்கை அரசுக்கு எதிராகத் தனது கசப்புணர்வை வெளிப்படுத்துவதற்கான வழிவகைகள், நடைமுறைகள் மற்றும் சர்வதேசக் கட்டுப்பாடு விதிப்புகள் போன்றவை குறித்து சர்வதேச மட்டத்தில் பல்வேறு அரங்குகளில் - நிலைகளில் - சர்வதேச சமூகம் ஆராய்ந்து வரும் காலகட்டமும் இது.

இந்தச் சமயத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டிலிருந்து வெளியேறும் அறிவிப்பை இலங்கை அரசுத்தரப்பு தானாக விடுக்குமானால் அதன் விளைவு, இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விபரீதமாகிவிடும் என்பதும் அரசுத் தலைமைக்கு நன்கு தெரியும்.

எனவே, யுத்த நிறுத்தத்தைப் பேணி, மதிப்பதாக வெளியே கூறிக்கொண்டு, அதேசமயம், அதை மீறும் வகையிலான இராணுவத் தாக்குதல்கள் மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன்மூலம் விடுதலைப்புலிகள் தரப்பை சீற்றமுறவைத்து, யுத்தநிறுத்தத்திலிருந்து வெளியேறும் இக்கட்டுக்குப் புலிகளைத் தள்ளும் இரட்டைத் தந்திரோபாயத்தைக் கையாள்கிறது அரசுத் தலைமை.

இதன்மூலம் இரண்டு இலக்குகளை அடையலாம் என அது நினைக்கிறது. ஒன்று புலிகளைக் கொண்டே யுத்த நிறுத்த உடன்பாட்டை முறிக்க வைத்து, யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து வெளியேறலாம். அடுத்தது - யுத்த நிறுத்தம் முறிந்ததற்கான முழுக் குற்றத்தையும் பொறுப்பையும் புலிகள் மீது சுமத்தலாம்.

இந்தக் குள்ளநரித்தனம் புரிந்து கொண்டமையால்தான் இவ்வளவு ஆத்திரமூட்டலுக்கு மத்தியிலும் சில உள்நோக்கங்களோடு - காலம், இடம், வலி அறிந்து - காத்திருக்கின்றார்கள் விடுதலைப் புலிகள் எனக் கொள்ளலாம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள அரசுத்தரப்பு பின்னடிப்பதற்கான மற்றைய காரணம், யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிந்து, முழு அளவில் யுத்தம் தீவு முழுவதும் வெடிக்குமானால் அதன் நேரடியான - விபரீதமான - மோசமான - கோரமான - கொடூரமான - முகத்தையும் விளைவுகளையும் சந்திக்க வேண்டும் என்ற அச்சநிலையாகும்.

கொடூரப் போர் வெடிக்குமானால் இழப்புகளை - மனித உயிர் மற்றும் உடைமைகளை மட்டுமல்லாமல் - பொருளாதாரம், சுபீட்ச வாழ்வு, நாட்டின் எதிர்கால நலன், சர்வதேச மட்டத்தில் நற்பெயர், ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை எனப் பலபல பேரிழப்புகளை - சந்திக்க வேண்டியிருக்கும் என்ற யதார்த்த மெய்யுண்மை தென்னிலங்கையைப் பீதிக்குள் ஆழ்த்தாமல் இல்லை.

தனது இராணுவ ரீதியான பலம் தொடர்பாக அளவுக்கு அதிகமாகத் தானே பிரசாரம் செய்து, தென்னிலங்கை மக்களை ஒரு மாயையான எதிர்பார்ப்புக்குள் ராஜபக்ஷ அரசு மூழ்க வைத்திருக்கின்றது. யுத்தம் வெடித்து, தென்னிலங்கை மக்களின் அந்த அதீத நம்பிக்கையை - எதிர்பார்ப்பை - சிதறடிக்கும் பெறுபேறுகள் வெளிப்படுமானால் தனது பிரசாரத்துக்குத் தானே பலியாகும் பேராபத்து அரசுத் தரப்புக்கு நேரும். அது கருதியும் யுத்த நிறுத்தத்தைத் தொடரவேண்டிய கட்டாயம் தெற்குக்கு.

மேலும், யுத்த நிறுத்தம் முறியாமல் இன்னும் தொடருமானால் - இப்போது மேலதிகமாகக் கிடைக்கும் கால அவகாசத்தை வைத்து - பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடமிருந்து ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிக்கும் தனது திட்டத்தை கனகச்சிதமாக நிறைவு செய்து தனது படைப் பலத்தை ஒரேயடியாக விஸ்வரூபம் எடுக்கவைத்து அதன்பின் புலிகளை முழு யுத்தத்தில் எதிர்கொண்டால் வெற்றிவாகை நிச்சயமாக கிட்டும் என்ற நம்பிக்கையும் அரசுத் தலைமைக்கு உண்டு.

அத்தோடு, யுத்த நிறுத்த உடன்பாட்டை இம்முறை முறித்தால் இனி இப்போதைக்கு அமைதி முயற்சி, சமாதானப் பேச்சு, சமரச எத்தனம், நல்லிணக்க உடன்பாடு என்பவை எல்லாம் இந்த ஜென்மத்திலும் வாய்க்காத விடயங்களாகிவிடும் என்ற உண்மையும், உடன்பாட்டிலிருந்து விலகும் விருப்பை நடைமுறைப்படுத்த விடாது அரசுத்தரப்பைத் தடுக்கின்றது.

விரும்பியும், விரும்பாமலும் யுத்த நிறுத்த உடன்பாட்டை பெயரளவுக்கேனும் பின்பற்றுவதாக அரசுத்தரப்பு பாவனை பண்ணுவதற்கு இந்த அம்சங்களே பிரதான காரணம்.

## ஆயர் இல்லத்துக்கு அருகே ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக படையினர் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்.ஆயர் இல்லத்துக்கு அருகாமையில் தேவாலயத்தில் நேற்று முன்தினம் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அப்போது ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி 11.50 மணியளவில் யாழ்.ஆயரின் இல்லத்திற்கு அருகாமையில் உள்ள சாந்தமரியாள் சொரூபம் வைக்கப்பட்டிருந்த இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் படையினரால் மீட்கப்பட்டன. பொதுமகன் ஒருவர் கொடுத்த தகவலை அடிப்படையாகக் கொண்டே அந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் கைக்குண்டு, தொலைத் தொடர்பு சாதனம், சயனைட் வில்லை இன்னும் பல பொருள்களும் அடங்கும். விடுதலைப் புலிகளே இந்த ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளனர் என்று பாதுகாப்புத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்

யாழ்ப்பாணம்,பெப்.22

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் இருந்து கணிசமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி விவரங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியாகியிருந்தது தெரிந்ததே.

குடாநாட்டில் உள்ள சில பாடசாலைகளில் இந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

* யாழ். இந்து மகளிர் கல்லூரி - 50 பேர்
* யாழ். மத்திய கல்லூரி - 17 பேர்
* யாழ். திருக்குடும்பக்கன்னியர் மடம் பாடசாலை - 40 பேர்.
* கொக்குவில் இந்துக் கல்லூரி - 35 பேர்.
* மானிப்பாய் இந்துக் கல்லூரி - 6 பேர்.
* மானிப்பாய் மகளிர் கல்லூரி - 12 பேர்.
* யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி - 17 பேர். (அ-8)

## முந்திரிகைப்பழம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். நகரப்பகுதியில் முந்திரிகைப் பழம் விற்பனைக்கு வரத்தொடங்கியுள்ளது. பஸ் நிலையப் பகுதியில் குறைந்த அளவிலேயே காணப்படும் முந்திரிகைப்பழம் கிலோ 250 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.(அ-88)

## தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு 500 அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் 500 பேரின் அடையாள அட்டைகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் மூலம் இவை உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக அடையாள அட்டைகள் பிரிவினர் தெரிவித்தனர். (அ)

## வெளிமாவட்ட ஆசிரியர்களின் சம்பளம் இப்போது வழங்கப்படுகிறது

வெளிமாவட்டத்தில் பணிபுரிந்து தற்போது குடாநாட்டில் தங்கியிருக்கும் ஆசிரியர்களுக்கு நிலுவையுடன் கூடிய சம்பளம் வழங்கப்பட்டு வருவதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வ.தி.செல்வரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

மன்னார், மடு, வவுனியா தெற்கு பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த சனிக்கிழமையில் இருந்து சம்பளம் வழங்கப்பட்டதாகவும், துணுக்காய், வவுனியா வடக்கு கோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, பூநகரி கோட்டங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியல் 'யுனிசெப்' அமைப்பு மூலம் அனுப்பப்படவுள்ளதாகவும், முல்லைத்தீவுக் கோட்டத்தில் இருந்து இதுவரை சம்பளப் பட்டியல் கிடைக்கவில்லையென்றும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ-88)

### நாளை

மாசி- 11
வெள்ளிக்கிழமை
23.02.2007
திதி: சஷ்டி
முற்பகல் : 09.34
நட்சத்திரம் : பரணி
கார்த்திகை
பிற்பகல் : 05.09
சுபநேரம் : 06.30 - 08.00
ராகுகாலம் : 11.00 - 12.30

## பாடநூல்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,பெப்.22

நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடநூல்கள் 48,000 பற்றாக்குறையாக உள்ளன.

இக் கோட்டத்திற்கு உட்பட்ட 40 பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 10 வரையான சகல வகுப்புகளுக்குமான பாடநூல்கள் வந்துசேரவில்லை. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், குடியியல், சைவசமயம் போன்ற பிரதான பாடநூல்களுக்கான நூல்கள் பெருமளவில் பற்றாக்குறையாக உள்ளன.

இதேபோன்று -

வேலணைக் கோட்ட பாடசாலைகளுக்கும் பிரதான நூல்கள் பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டுப் பாடசாலைகளுக்கான பாடநூல்கள் இரண்டு தடவைகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டன.(202-88)

## 6 இளைஞர்கள் காணாமற்போனதாக ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.22

குடாநாட்டில் ஆறு இளைஞர்கள் காணாமற்போயுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இமானுவேல் கேந்திராவிவிலியன் (வயது 28), 5ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டேவிற் அருள்நேசன் (வயது 36) ஆகியோர் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் யாழ். நகருக்குச் சென்றவேளை காணாமற்போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த தியாகராசா சரண் (வயது 25) என்பவர் அவரது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 9 மணியவில் கைது செய்யப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

அதேபோன்று அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த தவராசா சுப்பிரமணியம் (வயது 48) என்பவரை நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வீட்டில் வைத்து கைதுசெய்துள்ளதாக முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - நவக்கிரியைச் சேர்ந்த விசுவாசம் அமல்ராஜ் (வயது 19) என்பவர் நேற்று முன்தினம் இராசவீதியூடாக பயணம் செய்தவேளை காணாமற்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

3ஆம் வட்டாரம், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கிருஷ்ணன் பத்மசிறிதரன் (வயது 33) என்பவரை கடந்த 16ஆம் திகதி மாலை 5.15 மணியளவில் வேலணைக்குச் சென்றதாகவும் அதன் பின்னர் அவர் காணாமற்போயுள்ளார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

## ஊர்காவற்றுறையில் நாளை நடமாடும் ஆய்வுகூட சேவை

குருநகர்,பெப்.22

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் நாளை வெள்ளிக்கிழமை ஆய்வுகூட நடமாடும் மருத்துவ சேவை இடம்பெறும்.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் நடமாடும் மருத்துவ சேவை வாகனத்தில் நோயாளர்களுக்கான இரத்தப்பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டு மருந்துகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (51)

## நாவலர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம்) ஆகியோரே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சம்பவ நேரம் வகுப்பறையில் ஆசிரியரும் மாணவர்களும் இருந்தவேளை வகுப்பறைக் கூரையின்மேல் கைக்குண்டு வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்பவ நேரம் தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சமீபமாக படையினர் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் சம்பவத்தின் பின்னர் குறித்த கல்வி நிறுவனம் அமைந்துள்ள வளவும் சூழலும் சோதனையிடப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

## இலங்கையில் தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்களைப் புரிந்தவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும். சில சம்பவங்களில் அரச படையினரால் அல்லது அவர்களுடன் சேர்ந்து இயங்கும் குழுவினரால் கைதுசெய்யப்படும் மக்கள் தொடர்பான தகவல்களை அரசு தெரிவிக்க மறுத்துவருகின்றது.

இலங்கையில் ஆட்கடத்தல், கடத்தப்பட்டுக்காணாமற்போதல், காணாமற்போனவர்களின் தகவல்களையும், அவர்களின் நிலைமைகளையும் மறைத்தல் போன்றவற்றிக்கு எதிராக கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் பாரீஸில் கையொப்பங்கள் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை காணாமற்போதல் தொடர்பாக ஒரு தெளிவான தடையை அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களில் கொண்டுவந்துள்ளதாக மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் லூயிஸ் ஆபர் தெரிவித்துள்ளார்.

[illegible] யாரும் [illegible] காணாமற் போக முடியாது. எந்த காரணங்களும் இதற்கு விதிவிலக்காக முடியாது. மேலும் யாரும் இதனை நியாயப்படுத்தவும் முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நிலையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்க முடியும். என்றும் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கோருவார்களாயின் சமாதான முயற்சிகளில் தொடர்ந்து அனுசரணைப் பணியாற்ற நோர்வே தயாராகவே இருக்கின்றது என்பதை நோர்வே அரசு தெளிவாகவே வெளிப்படுத்தி நிற்கின்றது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தனது பெறுமதிமிக்க பணியைத் தொடர் கின்றது.

இலங்கைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தக் கூடிய எந்த முயற்சியும் அனைத்து இன சமூகங்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றே நோர்வே திடமாக நம்புகின்றது. பல் சமூக ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு நோர்வே தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்ட தாயினும் தனித்து நோர்வேயினால் மட்டும் உருவாக்கக் கூடிய விடயம் அல்ல அது - என்றார். (அ-உ)

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## குடாக்கடலில் மீன் பிடிக்க சில தினங்களாக தடைவிதிப்பு

குருநகர்.பெப்.22

குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு கடந்த சில தினங்களாக மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட எல்லைகள் ஏற்கனவே குறைக்கப்பட்ட நிலையில், கடந்த 20ஆம் திகதி தொடக்கம் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை என்று மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குருநகர், நாவாந்துறை, பாஷையூர் மற்றும் தீவகப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால் கடல் உணவுக்கு நேற்று பெரும் தட்டுப்பாடு நிலவியது. (1-51-88)

## புதுமைப்பித்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்.ஆரியகுளம் உயர் கல்வி நிலைய ஆதரவில் புதுமைப்பித்தன் நூற்றாண்டு நினைவுச் சிறுகதைக் கருத்தரங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி க.குணராஜா, விரிவுரையாளர் ஈ.குமரன், விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (202)

## இலக்கியவாதி இராசையா காலமானார்

யாழ்ப்பாணம், பெப்.22

தமிழ்க் கலைஞர் வட்டம் (தகவம்) என்ற திறனாய்வு மன்றத்தின் தலைவராக விளங்கியவரும் எழுத்தாளர் கலைஞர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவருமான வ.இராசையா அண்மையில் கொழும்பில் காலமானார்.

கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர் வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இளைஞர் மன்றம், சிறுவர் மலர் ஆகிய நிகழ்ச்சிகளையும் இவர் நடத்தியுள்ளார். இவர் தமது இலக்கியப் பணிகளுக்காக இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும் யாழ்.இலக்கியப் பேரவை மற்றும் மாகாண சபை பரிசுகளையும் பெற்றுள்ளார். (ப)

## சாரணர் தினம்

யாழ்ப்பாணம், பெப்.22

உலக சாரணர் தினத்தை ஒட்டி பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு வல்வை சிதம்பராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜாவும் கலந்து கொள்வர். (202)

## எள் செய்கையில் ஆர்வம்

நவாலி,பெப்.22

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் எள்ளு விதைப்பதற்கான ஏற்பாடுகளில் இப்பகுதி விவசாயிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

எள்ளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் தொடர்ந்து நல்லெண்ணையின் விலை போத்தல் ஒன்று ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

இதனால், நெல் அறுவடை முடிந்த கையோடு இப்பகுதியில் எள் விதைக்கும் வேலைகள் தொடங்கியுள்ளன. (1-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

859 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம்

**04 12 43 53**

**20-02-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4861064 - 4876510

ஜக்பொட் பரிசு ரூபா.1,714,850/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 341,187 | 10/- | 3,411,870/- |
| 2 இலக்கங்கள் | 31,250 | 20/- | 625,000/- |
| 1 இல. + லக்கினம் | 30,901 | 30/- | 927,030/- |
| 2 இல. + லக்கினம் | 2,898 | 100/- | 289,800/- |
| 3 இலக்கங்கள் | 824 | 500/- | 412,000/- |
| 3 இல. + லக்கினம் | 83 | 5,000/- | 415,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,714,850/- | 1,714,850/- |
| மொத்தம் | | | 8,195,550/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 407,153 | | 9,219,050/- |

**இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4873424-1-76 |
| காலி | 4871353-2-53 |
| பதுளை | 4862608-0-86 |
| மொனராகலை | 4872904-7-88 |
| குருநாகல் | 4861970-9-25 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

---

மாகாண சுகாதாரசேவைகள்
பிரதிப்பணிப்பாளர்பணிமனை, யாழ்ப்பாணம்.

## அரசாங்க அறிவித்தல்
### கழிக்கப்பட்ட பொருள்கள் ஏலவிற்பனை

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மேற்படி அலுவலகத்திலும் வைத்தியசாலைகளிலும்வைத்து பின்வரும் விவரப்படியான கழிக்கப்பட்ட பொருள்கள் 15.03.2007 வியாழக்கிழமை முற் பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் ரூபா 250 மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாகச் செலுத்தி 13.03.2007 பி.ப3மணிக்கு முன்பாக தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். பதிவுசெய்யாத எவரும் கேள்வியில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். சித்திபெற்ற கேள்விக்காரர்கள் உடன் உரிய கேள்வித்தொகையைச் செலுத்தி பொருள்களைத் தமது செலவில் எடுத்துச் செல்லுதல் வேண்டும். வேறுவிவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலகநேரங்களில் அறிந்துகொள்ளலாம். பெருள்களையும் பார்வையிடலாம்.

1. வெற்றுத் திரிபோஷ பைக்கற்றுக்கள் 5000வரை
2. வெற்று உரைப்பை 18000வரை
3. வெற்றுப் போத்தல்கள் (750,550,400 ML)500வரை
4. பாவித்த ரயர்கள்
5. பாவித்த, கழிக்கப்பட்ட மர ,இரும்புத்தளபாடங்கள் மற்றும் பொருள்கள்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
பிரதி மாகாணப் பணிப்பாளர், சுகாதார சேவைகள்,யாழ்ப்பாணம்.

(சி.52084)

---

*யாழ்.ஆரியகுளம் உயர்கல்வி நிலைய ஆதரவில் நடைபெறும்*

## புதுமைப்பித்தன் நூற்றாண்டு நினைவுச் சிறுகதைக் கருத்தரங்கம்

காலம்: 25.02.2007 காலை 9.00 மணிக்கு
இடம்: நாவலர் கலாசார மண்டபம்
தலைமை: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

**நிகழ்ச்சி நிரல்**

அகவணக்கம்
வரவேற்புரை: திரு. நா. குழந்தைவேலு (விரிவுரையாளர், தமிழ்த்துறை புதிய உயர்கல்வி நிலையம்)
வாழ்த்துரை: பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)
திருமதி அருள்நங்கை சண்முகநாதன் (இயக்குநர், புதிய உயர்கல்வி நிலையம்)
தலைமையுரை: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
"குளத்தங்கரை அரசமரம்" - பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்
"சாபவிமோசனம்" - பேராசிரியர் அ. சண்முகதாஸ்
"சிறிது வெளிச்சம்" - கலாநிதி க. குணராஜா
"பாற்கடல்" - திரு.இ.குமரன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
"முதற் சம்பளம்" - கலாநிதி செ. திருநாவுக்கரசு (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)
"கோசலை" - திரு. க. அருந்தாகரன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
நிறைவுரை

**இக்கருத்தரங்கு நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி.52081) கருத்தரங்க அமைப்பாளர்கள்.

---

**முழு நாட்டையும்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக தடவைகள் இந்த ஒப்பந்தம் மீறப் பட்டுள்ளது என்று அந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதோ அல்லது கிழித்தெறிவதோ இப்போதைய பிரச்சினையல்ல. நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படாதவாறு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைப் பற்றியே சிந்திக்க வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம்போல் எத்தனையோ ஒப்பந்தங்கள் உள்ளன. அந்த ஒப்பந்தங்களையெல்லாம் பாதுகாப்பதற்காக தேசத்துக்கு விரோதமான முறையில் ஒரு போதும் செயற்படமுடியாது.

-இவ்வாறு அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்தார். (ஐ)

---

**ENGLISH MEDIUM CLASSES**
**GRADE 06,07**
COMMENCE ON : 24th Feb. 2007 SATUR DAY
ENROL EARLY - Director
The Express Institute
(சி.52053)

---

**பொருளியல்**
**G.GNANAM**
(B.A.Hons. Economics special)
பொருளியல் பாடத்துறையில் புதிய பாய்ச்சல்
கருத்தரங்குத் தொடர்
1st in Commerce
Sat. 11 - 12 a.m.
**DCM** யாழ்ப்பாணம்.
HIGHER ECONOMIC CENTRE (HEC)
A/L 2007 PAPER CLASS
பிரிவு I - Sat 2 - 3; பிரிவு II - Thu 3 - 4
A/L 2008 பேரினப்பொருளியல் Tue 3 pm - 4 pm
50/22, செட்டித்தெரு, நல்லூர்.

---

## விற்பனைக்கு

1. இசுசு லொறி 24ஸ்ரீ தொடர் இலக்கம்.
2. மோட்டார் சைக்கிள்கள் (இரண்டு)
3. SONY TV 4.பிறிஜ், 5.CD செற்
6. Steel மேசை 7.மற்றும் வீட்டுத்தளபாடங்கள் போன்ற பொருள்கள்.

தொடர்பு : வி.ஞானபண்டிதர், கட்டுடை, மானிப்பாய்.

---

## விற்பனைக்கு

1000 இற்கும் மேற்பட்ட தமிழ்ப்படப் பிரதிகள் (அனைத்தும் SKC Antifung 45) பதிவு செய்யப்பட்டவை, 1000 இற்கும் மேற்பட்ட பிரமிட், ஐங்கரன், கொலம்பியா தமிழ்ப்பட VCD க்கள் (அனைத்தும் 3CD கண்ணாடிக் கவருடன்) விற்பனைக்குண்டு.

தொடர்பு 021 222 4257

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக அங்கத்தவர்
ஆசிரியை
**திருமதி சு.பரமேஸ்வரன்**
அவர்களின் அன்புக் கணவர்
**சுரேந்திரம் பரமேஸ்வரன்**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/கனகரத்தினம் ம.ம.வி.**

---

## மரண அறிவித்தல்

*வைத்தியகலாநிதி சுந்தரலிங்கம் யோகேந்திரன்*

யாழ்ப்பாணம், நல்லூர், பண்டாரக்குளம் வீதியைப் பிறப்பிடமாகவும் முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றியவரும் இப்போது கனடா ஸ்காபறோ கிறேஸ் வைத்தியசாலையில் Coneuntant Anaesthetist ஆக சேவையாற்றியவருமான வைத்தியகலாநிதி யோகேந்திரன் 19.02.2007 அன்று கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் நீர்ப்பாசன பொறியியலாளர் அமரர் இராமலிங்கம் சுந்தரலிங்கம் - இந்திராணி தம்பதியரின் கனிஷ்டபுதல்வனும் நீர்வேலி அமரர் தம்பு நமசிவாயம் நவரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அருமை மருமகனும் ஸ்ரீ ரஞ்சினியின் அன்புக்கணவரும் செல்வி நதனி, செல்வி வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் லிங்கேந்திரன், ரவீந்திரன், அமிர்தா ஆகியோரின் பாச மிகு சகோதரனும் ரவீந்திரன், அமரர் முரளிகிருஸ்ணா, நமசிவாயம், கதிரமலைநாதன், சபேசன், ஸ்ரீசாந்தினி, ஸ்ரீரட்ணாம்பிகா, ரேவதி முரளி கிருஸ்ணா, பத்மஜா நமசிவாயம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2007) வியாழக்கிழமை ஒக்ஹில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2463, Bon - Echo Drive Oakville, Ontario, L6H 7RI, Canada.
Fax/Phone: 9052578763

தகவல்: நே.சுஜிந்தன், ந.ரவீந்திரன்.

(58381)

---

## உபநயன பிரமமோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்பதி ஸ்ரீ மங்களகரமான விய வருஷம் மாசி மாதம் 10ஆம் நாள் இன்று (22.02.2007) வியாழக்கிழமை அச்சுவினி நட்சத்திரமும் அமிர்தயோகமும் ஷஷ்டி திதியும் கூடிய சுபநாளில் முற்பகல் 11.51 மணிமுதல் 1.09 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் நாகேந்திரக்குருக்கள் அமிர்தாம்பிகை அம்மா தம்பதியரின் பௌத்திரனும் நாகேஸ்வரஐயர் சுலோசனா அம்மா தம்பதியரின் தௌஹித்திரனும்

எமது கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

### பாலகணேசனுக்கு

சௌன யக்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் செய்து வைப்பதற்கு கொண்டலடி விநாயகப் பெருமான் அருளாசியுடன் ஆலய மண்டபத்தில் நடைபெற விருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து சபையைச் சிறப்பித்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன தீட்சா குரு : சிவப்பிரம்மஸ்ரீ சிவானந்த நித்தியானந்த சிவாச்சாரியார் அவர்கள்

யா/வண்.வடகிழக்கு, கொண்டலடி விநாயகர் தேவஸ்தானம், கஸ்தூரியார் வீதி, யாழ்.

தங்கள் நல்வரவை நாடும்:

---

**UNIVERSITY OF JAFFNA**
**MEDIA RESOURCES AND TRAINING CENTRE (MRTC)**
**FACULTYOF ARTS**

## Post of Trainner in Journalism (on contract)

Applications are invited from those possessing the following qualifications for the post of Trainer in Journalism (on contract basis) at the Media Resources and Training Centre (MRTC).

1. A Degree from a recognized University
2. Have completed a course in Training of Trainers in Journalism.
3. Possess good experience in print or electronic media or both.

Allowances : Rs.17,985/= p.m.(all inclusive and fixed)

Closing Date : 09.03.2006

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna , Sri Lanka, either in person or by sending a money order for Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order / Postal order drawn in favour of the " Bursar, University of Jaffna " together with a self - addressed stamped envelop 23 x 30 cm. in size.

MRTC is an independent Institution under the Administration of the University of Jaffna for the training and capacity building of Journalism and the appointment to the post of Trainer is not governed by the Universities Act. of 1978 as amended by the Universities (Amendment) Act. 7 of 1985 and circulars issued by the UGC.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

Registrar,
21February 2007

---

## மரண அறிவித்தல்கள்

### *சண்முகம் குலசிங்கம்*

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வரியப்புலம், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் குலசிங்கம் நேற்று (21.02.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் தயாளன் (ஆஸ்திரேலியா), தயானந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மருத்துவபீடம்), தயாபரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தயானந்தன் (மகன்).**

### *திருமதி கமலேஸ்வரி நித்தியானந்தன்*

**(ஆசிரியை,மன்/புனித சேவியர் ஆண்கள் பாடசாலை, மன்னார்)**



கைதடியைப்பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி நித்தியானந்தன் (21.02.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - குகஞானம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் சேனாதிராஜா நித்தியானந்தனின் (பொறுப்பதிகாரி, நீர்வழங்கல் வடிகாலமைப்புசபை, மன்னார்) அன்புமனைவியும் காலஞ்சென்ற காயத்திரி மற்றும் சிவாகரன் (மாணவன், கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான சிவகுமாரன்,புவனேஸ்வரி, செல்வகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று வியாழக்கிழமை (22.02.2007) நடைபெற்று, பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் தெகிவளை கல்கிசை மாநகரசபை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சே.நித்தியானந்தன்**
**C28/G1, சொய்சாபுரதொடர்மாடி**
**மொறட்டுவ.**
**T.P.:0112623347, H.P.: 0776660590**

தகவல்
சே.ஸ்ரீஸ்கந்தன் (மைத்துனர்),
34/6, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

கல்ஹிசை மலர் சாலை- T.P.: 011 2712476, 011 2712477

### திருமதி ஞானரஞ்சிதம் ராசேந்திரம் (ஞானம்)

பிரம்படி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானரஞ்சிதம் ராசேந்திரம் நேற்று (21.02.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசேந்திரத்தின் மனைவியும் பொன்னுத்துரை - சிவசோதிப்பிள்ளை தம்பதியரின் மகளும் ரமேஸ், சுரேஸ் (லண்டன்), ரஜனி (ஜேர்மனி), சதீஸ் ஆகியோரின் தாயும் மனோரஞ்சிதத்தின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி, சிவஞானவதி, அழகேந்திரம் ஆகியோரின் மைத்துனியும் மதுசுதன் (ஜேர்மனி), சம்யுதா ஆகியோரின் மாமியும் விஷ்ணுஜன், கஜானா, பாகிரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2007) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ரமேஸ் (மகன்).**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org